**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 218/2022**

**Date** : 30.01.2026

**வா.சா. 1** – **முத்துகிருஷ்ணன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொடை விழா நடத்தக்கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணம் 2019 ல் கும்பாபிஷேகம் நடந்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வரவு செலவு கணக்குக்கான ஆவணம் என்றால் சரிதான். 2019 ம் வருடம் கோவிலின் தலைவர் யார் என்றால் குமாரவேல். வா.சா.ஆ.5 ல் தலைவர் என்ற இடத்தில் என்ன பெயர் போடப்பட்டுள்ளது என்றால் சுப்பையா அது கும்பாபிஷேகத்திற்கு வேண்டி அவரை தலைவராக போடப்பட்டது. இவ்வழக்கை தாக்கல் செய்ய மேற்படி சுப்பையாவோ, குமாரவேலோ முன்வரவில்லை என்றால் சரிதான் தகராறு ஏற்பட்டது பின்வாங்கிவிட்டார்கள். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வாதியாகவோ பிரதிவாதியாகவோ யார் வேண்டுமானும் மனு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு வாதிக்கு வேண்டி சாதகமாக யாரும் வழக்கில் சேரவில்லை என்றால் சரியல்ல எத்தனை நபர்கள் வேண்டுமானும் அழைத்து வரலாம்.

வா.சா.ஆ.7 ஆவணம் 2021 ம் வருடம் அச்சடிக்கப்பட்டுள்ளது புதிதாக உள்ளது வழக்கிற்காக அச்சடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வா.சா.ஆ.7 ஆவணத்தை தயார்செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மரவள்ளியம்மன் கோவிலில் கொடைவிழா நடப்பதில்லை சிறப்பு பூஜைகள் தான்

நடைபெறும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் நான் செயலாளராக இருந்த சமயத்தில் வசூல் செய்த ரசீது என்றால் சரிதான். 03.06.2010 தேதியிட்ட வா.சா.ஆ.10 ஆவணம் சேதமடைந்த நிலமையில் உள்ளது ஆனால் வா.சா.ஆ.7 புதிதாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் என்ன ஆவணம் என்றால் கும்பாபிஷேகம் நடந்ததற்கான வரவு செலவு கணக்கு. இதை தவிர வேறு மினிட் புத்தகம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.6 ல் மரகதவள்ளியம்மன் கோவிலில் கொடைவிழா நடந்ததற்கான தீர்மானம் போடப்பட்டுள்ளதா என்றால் காவல்துறையினர் அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் தீர்மானம் போடவில்லை கொடைவிழா நடைபெற்றது. வா.சா.ஆ.6 ல் கொடைவிழாக்கான கணக்குகள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் துண்டு சீட்டில் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 யார் எழுதியது என்றால் எனது மகள் எழுதியது. வா.சா.ஆ.14 ஆவணம் வருஷாபிஷேகம், கும்பாபிஷேகம் திருப்பணிக்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 பென்டிரைவ்வில் பதிவு செய்யப்பட்டது என்னால் எனது தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பதிவு வீடியோ கிராபிரால் எடுக்கப்பட்டது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் கும்பாபிஷேகம், வருஷாபிஷேகத்திற்கான புகைப்படங்கள் என்றால் சரியல்ல கொடைவிழாவிற்கானதும் உண்டு.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நான் செயலாளராக இருக்கும் சமயத்தில் உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான் தற்போதும் செயலாளராக தான் இருக்கிறேன். ஊர்காரர்கள் அனைவரும் சேர்ந்து பிரதிவாதிகளை தலைவர் செயலாளர்

மற்றும் பொருளாளராக நியமித்துள்ளார்கள் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதைய திருக்கோவில் விழா அனைத்தையும் பிரதிவாதிகள் தான் நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**